**கவனிக்க.**-2024.09.06 ஆந் திகதிய இல.2401 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ்மொழிமூலம்) மற்றும் பகுதி IV(ஆ) (தமிழ்மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2402 - 2024 සැප්තැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2024.09.13

*2402 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1901 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1900 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1899- B 082608 - 5,403 (2024/09)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச செயலகப் பிரிவில் வாகரை கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை 2024, யூலை - 2025 யூன்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 1982ஆம் ஆண்டின் கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு, வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட வாகரை கள்ளுத் தவறணைக்கான கேள்வி 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2025, யூன் மாதம் 30ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை கோரளைப்பற்று வடக்கு, பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 1,500.00 ) பணத்தை கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2024.09.13ஆந் திகதி முதல் 2024.09.24ஆந் திகதி முற்பகல் 11.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% இற்குக் குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. பிழையாக பூரணப்படுத்தப்படும் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை மீளப் பெற விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப் பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் மீளச் சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### அட்டவணை

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| பால்சேனை கிராம அலுவலர் பிரிவு | TT No. 05 | 2024.09.25 | மு.ப. 10.30 மணி |

**குறிப்பு.-** 1. கேள்விச் சபை 2024.09.25 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்குக் கூடும்.

2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு கேள்விச்சபை 2024.10.02 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

3. தெரிவு செய்யப்படும் குத்தகைக்காரர் மீள் குத்தகை விற்பனை இடம்பெற்ற அதே தினத்தில் அலுவலக நேரத்தினுள் பாதுகாப்பு வைப்புத் தொகையை பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும்.

கே. தனபால சுந்தரம்,
பிரதேச செயலாளர்,
கோரளைப்பற்று வடக்கு,
வாகரை.

பிரதேச செயலகம்,
கோரளைப்பற்று வடக்கு,
வாகரை,
2024, ஓகத்து 07.

09- 52

---

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பெயர் மாற்றம்*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 9(2) இற்கு இணங்க 2024, ஓகத்து 01 ஆந் திகதி நிறுவனத்தின் பெயர் மாற்றப்பட்டது.*

*நிறுவனத்தின் முன்தைய பெயர்:* யுனிவொசல் வேவ்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்
*நிறுவனத்தின் இல.:* PV 00209688
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* இல. 16/3, கண்டவலவட்டா, மிரிஸ்வட்டா சாலை, கஹதாபித்தியா, கனன்விலா
*நிறுவனத்தின் புதிய பெயர்:* டெகரொமச ( பிரைவட்) லிமிட்டட்

வாரியத்தின் ஆணைப்படி,

கம்பனிச் செயலாளர்.

09- 58

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2) இற்கு அமைவாக பின்வரும் நிறுவனத்தின் பெயர் மாற்றப்பட்டுள்ளது என்று அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.*

*நிறுவனத்தின் முன்னைய பெயர்:* ரா இன்வெஸ்ட்மன்ட்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்
*பதிவு இலக்கம்:* PV 117570
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல.10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 05
*நிறுவனத்தின் புதிய பெயர்:* ரக் ஷஸ்தால் (பிரைவட்) லிமிட்டட்

கம்பனிச் செயலாளர்.

09-64

---

## மக்ரோ டெவலபர்ஸ் ( பிரைவட்) லிமிடெட்டின் கூறப்பட்ட மூலதனத்தைக் குறைப்பதற்கான முன்மொழிவு

*கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தைக் குறைக்கும் 59(2) ஆம் பிரிவின் கீழ் கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தைக் குறைக்கும் பொது அறிவித்தல்.*

*கம்பனியின் பெயர்:* மக்ரோ டெவலபர்ஸ் (பிரைவட்) லிமிடெட்
*பதிவு இலக்கம்:* PV 95943
*கம்பனியின் பதிவு முகவரி :* இல.124, 5 ஆம் மாடி, மாயா அவன்யூ, கொழும்பு 06
*குறைப்பதற்கு முன் கூறப்பட்ட மூலதனம்:* ரூபா 200,450, 010.00
*குறைப்பதற்கு ஏற்ப கூறப்பட்ட மூலதனம்:* ரூபா 450,010.00
*குறைக்கப்பட்ட தொகை:* ரூபா 200,000,000.00

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

வாமர்ஸ் இன்டர்நெஷனல் (பிரைவட்)
லிமிடெட்
(மக்ரோ டெவலபர்ஸ் (பிரைவட்)
லிமிடெட்டின் கம்பனிச் செயலாளர்கள்).

2024, ஓகத்து 26.

09-65

---

## கம்பனி பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய 2024.07.19 ஆந் திகதி முதல் பின்வரும் கம்பனி பெயர் மாற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பழைய பெயர்:* ஐசிசி கிரீன் எனர்ஜி சொல்யூஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
*கம்பனி இல.:* PV 81511
*பதிவு அலுவலக முகவரி :* இல.214/ A, தலவத்துகொட வீதி, பிட்டகோட்டே
*கம்பனியின் புதிய பெயர்:* கிரின் எனர்ஜி சொல்யூஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

எஸ் எஸ் பி கோர்ப்பரேட் (பிரைவட்)
லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

09-102

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் கீழ், கோட்ஸ்டெக் டிஜிட்டல் ஃபவுண்டரிஸ் (பீவீஐ) எல்டீடி (வர்த்தக பதிவு இல. PV 00246167) இன் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் ரூ. 20,000,000.00) (இலங்கை ரூபாய் இருபது மில்லியன்) இருந்து ரூ. 200,000.00) (இலங்கை ரூபாய் இரண்டு இலட்சம்) ஆகக் குறைக்கப்பட்டுள்ளது என இந்த பத்திரிகை அறிவித்தல் அறியத்தருகிறது.

ஆலோசகர் வாரியத்தின் ஆணைக்கிணங்க,

சிம்பல்புக்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்,
நிறுவன செயலாளர்.

09-130

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.